17-8-70

# ஆத்மஜோதி




ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.



ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்


ஜோதி 22 | சாதாரண ஸ்ரீ ஆவணி மீ 1ம் உ [17-8-70] | சுடர் 10


# பொருளடக்கம்


| | |
|---|---|
| பல்லாண்டு பல்லாண்டு | 291 |
| இறுதிக்காட்சி | 292 |
| தீயினும் அஞ்சப்படும் | 293 |
| அப்பர் அருளமுதம்—10 | 296 |
| ஓடி வருவாயே | 300 |
| இயற்கையே சோதிடம் | 302 |
| அம்ம நாம் அஞ்சுமாறே | 307 |
| உண்மை வழியே உயர்ந்த சமயம் | 313 |
| கயிறு ஊசல் | 322 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்




ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# பல்லாண்டு பல்லாண்டு

இறைவனுக்குப் பல்லாண்டு பாடுகின்றோம். நாம் வாழப் பாடுகின்றோம். இறைவனை வாழ்த்துதல் மூலம் நம்மை நாமே வாழ்த்திக் கொள்ளுகின்றோம்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்து ஆண்டு
பலகோடி நூறு ஆயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

என்று பாடுகின்றார் பெரியாழ்வார். பல வருஷங்களிலும் பல வருஷங்களிலும், பல ஆயிரம் வருஷங்களிலும், பல கோடி நூறு ஆயிரம் வருஷங்களிலும் (காலதத்துவம் உள்ள வரையிலும்) மல்லர்களை ஜெயித்த வலிமையுடைய தோள்களைப் பெற்றிருக்கும் நீலமணி போன்ற நிறத்தை உடையவனே! உன்னுடைய சிவந்த திருவடிகளின் அழ-குக்கு மங்களமான ரக்ஷை உண்டாகுக.

பரதத்வ நிர்ணயம் (பரம்பொருள் எதுவென்று நிச்சயித்தல்) பண்ணியபின் யானை மீது ஏறிப் பெரியாழ்வார் ஊர்வலம் வரும்போது பரமபதநாதன் பிராட்டியுடன் கருடாரூடனாய் அவர்முன் தோன்றினான். அதைக் கண்ட ஆழ்வார் 'காலம் நடையாடாத பரமபதத்தில் இருக்கும் இப் பரம புருஷன் காலம் நடையாடுகிற இந்த உலகத்தில் வந்து நிற்கிறானே! இவனுக்கு என்ன தீங்கு வருகிறதோ என்று பயந்து, ரக்ஷணம் பண்ணுகைக்காக, யானை மணிகளையே தாளமாகக் கொண்டு, 'பல்லாண்டு' என்று தொடங்கும் இப் பிரபந்தத்தைப் பாடினார். பல்லாண்டு—அடியார்கள் தங்களுக்குப் பகவான் மீதுள்ள பேரன்பின் மேலீட்டினால் அவனுடைய எல்லாம் வல்ல சக்தியையும், பெருமைகளையும் மறந்து அவனுக்கு யாதொரு தீங்கும் வராதிருக்க அவனை ஆசீர்வதித்தல்.

# இறுதிக் காட்சி

## (கபீர்)

கிளி கூட்டை விட்டுப் பறந்தது. இந்தக் கூட்டில் பத்து வாயில்கள். பத்து வாயில்களுக்கும் கதவுகள் இருக்கின்றன. கண்களிலிருந்து நீர்வழிய ஆரம்பித்து விட்டது. நற்பேறற்றவனே! நீ ஏன் பேசவில்லை? கபீர் சொல்லுகிறார். சகோதர சாதுவே கேளுங்கள். அன்னம் பறந்து விட்டது. நூல் அறுந்து விட்டது. (உயிர் பிரிந்து விட்டது.)

★★ ★★ ★★

எந்த வஞ்சகன் நகரத்தைக் கொள்ளை அடித்தான்? சந்தன மரத்தில் கட்டில் செய்து அதன்மேல் மணப்பெண் தூங்குகிறாள். தோழி, எழுந்திரு. என் வகிரை எடுத்து வாரிவிடு. மாப்பிள்ளை என்னிடம் ஊடல் கொண்டிருக்கிறார். எமராசன் வந்தான். கட்டிலில் ஏறி உட்கார்ந்தான். கண்களில் நீர் பொழிந்து வழிகிறது. நான்கு பேர் சேர்ந்து கட்டிலைத் தூக்குகின்றனர். நான்கு திக்குகளிலும் ஆரவாரம். கபீர் சொல்கிறார். சாது சகோதரா! கேள். உலகத்திலிருந்து உறவு தொலைந்து விட்டது. (கணவன் போகும் போது பெண் நிலை.)

★★ ★★ ★★

எதற்காகப் போர்வை போர்த்துகிறாய்? போகின்ற நேரம். உயிரான இராமர் வெளியேற ஆரம்பிக்கும் பொழுது இரண்டு கண்களின் மணிகளும் திரும்பி விடுகின்றன. உள்ளே இருந்து வெளியே கொண்டு வந்த உடனேயே அரண்மனை 'அட்டாரி' எல்லாம் அற்றுப் போய் விட்டன. நான்கு பேர் சேர்ந்து தூக்கிக்கொண்டு தெருவழி எல்லாம் அழுதுகொண்டே எடுத்துச் செல்கின்றனர். கபீர் சொல்கிறார்;— சகோதர சாதுவே கேளுங்கள். கூட வந்தது அந்தக் காய்ந்த குச்சிதான்.

# தீயினும் அஞ்சப்படும்

—( ஆசிரியர் )—

— ★★★★★ —

எவை தீயினும் அஞ்சப்படும்? தீயவை.

ஏன்? தீயவை தீய பயத்தலால். இது வள்ளுவர் கருத்து பிறருக்குத் தீங்கு செய்வதற்கு மிகவும் அஞ்சவேண்டும் என்பதற்கு வள்ளுவர் கூறும் காரணத்தைப் பார்த்தோம். நெருப்பானது ஒருபொருளைச் சுட்டெரித்துச் சாம்பராக்கி விட்டாலும் அத்துடன் நின்றுவிடும். பிறிதொரு காலத்தும், பிறிதொரு தேசத்தும், பிறிதோர் உடம்பினும், சென்று சுடுதல் தீக்கு இல்லை. நெருப்பு வைத்தவனை ஒன்றும் செய்யாது. ஆனல் ஒருவன் இன்னொருவனுக்குச் செய்யும் தீங்கு பல துன்பங்களைப் பலருக்கு உண்டாக்கித் துன்பத்தைப் பெருக்கும், கடைசியில் அதன்பயன் தீங்கைச் செய்தவனையே வந்து தாக்கும். நெருப்பு வேரைச் சுடமாட்டாது. பாவம் வேரளவாகச் சுட்டுவிடும். தீவினையாகிய நெருப்பு மறுபிறப்பிற்கு பாதையைத் திறந்து வைப்பதனுலே நெருப்பைப் பார்க்கிலும் தீவினைக்கு அஞ்சவேண்டும்.

இன்றைய உலகில் ஜனப்பெருக்கத்தை விட டாக்டர்களும் வைத்தியசாலைகளும் மிகமிக வேகமாகப் பெருகி வருகின்றன. எத்தனை டாக்டர்மார்கள் இருந்தாலும் எத்தனை வைத்தியசாலைகள் இருந்தாலும் வைத்தியசாலையைநோக்கிய மக்கள் படையெடுப்பு குறைந்தபாடில்லை. முப்பது ஆண்டுகட்கு முன் ஒரு வைத்தியசாலையில் ஒரு டாக்டர் மாத்திரம் இருந்தார். எந்த நோயானுலும் அந்த நோய்க்கு அவரே வகை சொல்லி வந்தார். இன்றோ உடம்பில் எத்தனை நரம்பு மண்டலங்கள் இருக்கின்றனவோ அத்தனை வைத்திய நிபுணர்கள் வைத்தியசாலைகளில் இருக்கிறார்கள்.

இத்தனை வைத்திய நிபுணர்கள் இருந்தும் தினமும் சாவுவீதம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதைமுந்திக்கொண்டு பிறப்பு வீதம் பெருகிக் கொண்டே வருகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் ஒரு பக்கத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கவே ஜனப்பெருக்கம் அசுர வேகத்தில் பெருகிக்கொண்டே செல்கிறது.

மனித நாகரிகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று தான் பண்டிதர் முதல் பாமரர் வரை கூறுகின்றனர்கள். எது நாகரிகம் என்பதை உய்துணராதவர்கள் அங்ஙனம் கூறுகின்றனர்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது. மக்களின் நலம் உடலாலும் உள்ளத்தாலும் குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு அரசாங்கத்தார் காலத்திற்கு காலம் விடும் அறிக்கைகளே சாட்சி. இன்றைய பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளே அடுத்த சாட்சியாகும்.

மக்கள் மத்தியிலே பெயர் தெரியாத எத்தனையோ நோய்கள் தோன்றி வைத்திய நிபுணர்களுக்குத் தினமும் தலைவலியை அளித்துக் கொண்டே வருகின்றன. இதற்கெல்லாம் மது, புகை, தீய நடத்தைகளே காரணமாகும். இவைகளெல்லாம் மனித வாழ்க்கைக்கு வேண்டாதவைகளே. இவைகள் தீயவைகள்.

சிகறெற், பீடி, சுருட்டு ஆகியவைகள் தீயவைகள். ஆதலால் தான் நாம் அவற்றை நெருப்பில் போட்டுப் பொசுக்குகிறோம் என்று ஒரு புகைப் பிரியர் கூறினார்.

புகை பிடிக்கும் பழக்கம் மேனாட்டாரிடம் கற்றுக்கொண்ட தீய பழக்கமாகும். மேனாட்டாரின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றது என்று கருதினாலும் நமது நாட்டுச் சுவாத்தியத்திற்கு இது ஏற்றதல்லவே. புகை பிடித்தல் ஒரு நாகரிகம் என்று கருதியே பலர் அதற்கு அடிமையாகின்றனர்.

படித்தவர்கள், பாமரர்கள், பட்டம் பெற்றவர்கள், சட்டம் கற்றவர்கள், நோய் தீர்க்கும் மருத்துவர்கள், ஆசு போக்கும் ஆசிரியர்கள், பெரியவர்கள், சிறியவர்கள்,

தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், இதன் தீமை அறிந்த வர்கள் அறியாதவர்கள் இப்படி எல்லாருமே இத்தீமைக்கு அடிமையாகி விட்டார்களே! புகைத்தீயில் புகைந்து போகிறார்களே! என்னே அறிவுடமை! பஸ்ஸில், புகையிரதத்தில் பிரயாணம் செய்துவிட்டு உடையைக் கழற்றும் போது புகைமணமே வீசுகின்றது.

அமெரிக்காவில் புகையின் தீமையை விளக்கித் துண்டுப் பிரசுரங்கள் வெளிவருகின்றன. 'நீ பற்ற வைக்கின்ற சிகரெட் உனக்கு வைக்கப்படும் கொள்ளி என அறிக' என்று ஒரு துண்டுப் பிரசுரத்தில் காணப்பட்டது. இறந்த பிணத்திற்குக் கொள்ளி வைக்கலாம். ஆனால் உயிரோடு அதுவும் தனக்குத் தானே கொள்ளி வைத்துக் கொள்ளலாமோ? புகையிலை நச்சுப்பொருள். இதில் 'நீக்கொட்டின்' என்ற நஞ்சு கலந்திருக்கிறது. இதனைப் பிரித்தெடுத்து ஒருதுளி முயல்மேல் வைத்தால் முயல் உடனே இறந்துவிடும். இத்தகைய நஞ்சு புகையிலையில் இருப்பதால் தான் நமது உடம்பில் பலவித நோய்கள் உண்டாகின்றன. நரம்புத் தளர்ச்சி, சோர்வு, விடாக்காய்ச்சல், நீரிழிவு, ஆஸ்துமா, இளைப்பு, இருதயத்தாக்கு, புற்று, வயிற்றுப்புண், காமாலை ஆகிய பல நோய்கள் புகையால் வருகின்றன.

புகையிலை தீயிலை என்றே புலவர் ஒருவர் வருணித்துள்ளார். ஆகவே தீயவை தீய பயக்கும். ஆதலால் அவை தீயினும் அஞ்சப்படும்.

---

தூய்மையான வாழ்வின் அளவே சபதத்தை நிறைவேற்றுவதற்கான சக்தி உண்டாக்கும். ஒழுக்கமில்லாதவன் ஒரு நாளும் நிறைவேற்ற முடியாது.

★★★

சபதங்கள் உடம்புக்கு பலம் தரும் மருந்துகளை ஒக்கும். பலவானுக்கு அத்தகைய மருந்துகள் தேவையில்லை. ஆனால் பெரும்பாலோர் பலவீனர்களே.

—காந்தி

# அப்பர் அருளமுதம்-10

—: ( முத்து ) :—

### அடியார்க்கு முத்தி காட்டும் ஏணி

ஆணி, ஏணி, கோணி, தோணி இந்த நான்கும் பிறர்க்கு நல்லனவே செய்து, தாம் செய்த நன்மையில் பங்குபெருமல் இருப்பவை. 'ஆணி' பெரியார்கள் படங்களைத் தாங்கி வைத்து தான் எப்பொழுதும் சிறியவனுகவே காட்சி அளிக்கும். ஏணி கீழிருந்து எல்லோரையும் மேலே ஏற்றிவிடும். ஆனல் தான் மேலே ஏறிச் செல்லாது. கோணி என்பது சாக்கு. அதனுள்ளே எத்தகைய நல்ல பொருட்களை யெல்லாம் கொண்டு வருவார்கள். பொருட்களைப் பெற்றுக் கொண்டதும் அதனைத் தூர வீசி விடுவார்கள். தோணி இக்கரையிலிருந்து அக்கரைக்கு ஆட்களைக் கொண்டு சேர்க்கும். ஆனல் தான் அக்கரைக்குப் போகாது.

தக்கன் சிவபெருமானுக்கு மாருக யாகம் செய்தபோது சந்திரன் அந்த யாகத்திற்குச் சென்றிருந்தான். அத்தோடு சந்திரன் குருத்துரோகமும் செய்தவன். இத்தகைய சந்திரனைச் சிவபெருமான் தக்கனுடைய யாகத்தின் போது தமது திருவடியால் தேய்த்தருளினர். இறைவனரின் திருவடி சம்பந்தம் உற்றமையினலே சந்திரன் இறைவனரின் திருமுடியிலே வசிக்கும் பேறுபெற்ருன்.

தக்கன் தனது இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். சந்திரனுக்கு ரோகிணி மீது நீங்காத ஆசை. அதனல் மற்றவர்களைக் கவனியாது ரோகிணியுடனேயே பிரியாது வாழ்ந்தான். மற்றைய பெண்கள் தக்கனிடம் சென்று முறையிட்டனர் தக்கன் கோபம் கொண்டு தேய்ந்து போகுமாறு சந்திரனைச் சபித்து விட்டான். சந்திரன் சிவபெருமானிடம் ஓடிச்

சென்று முறையிட்டான். சிவபெருமான் தேய்ந்தவாறே வளர்ந்து வருவாய் எனச் சாபவிமோசனம் கொடுத்தார். இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள்

"பேணியநற் பிறைதவழ் செஞ்சடையினனை"

எனக் குறிப்பிடுகின்றார்.

இறைவனரது மேனி செம்மேனி. அவரது சடையும் செஞ்சடை. சடையின் இயற்கை செம்மையாகும். சேர்க்கையினாலே தான் முடி கருமை நிறம் கொள்கிறது. சந்திரனது ஒளி சடையை மேலும் செம்மையாக்குகின்றது. அவர் அணிந்திருக்கும் பொன்னிறக் கொன்றை சடையின் செந்நிறத்திற்கு ஊட்டம் கொடுக்கின்றது. கையில் தாங்கிய அக்கினியையும், மேனியின் செம்மையும் சடையைச் செம்மையாக்கிவிட்டன. கூந்தலை வழக்கமாக முகிலுக்கு உவமையாகக் கூறுவர். முகில் சந்திரனுடைய சம்பந்தத்தினாலே செவ்வானம் ஆகிறது. அதுபோல இறைவனுடைய திருச்சடையும் சந்திரனுடைய சம்பந்தத்தினாலே செஞ்சடையாயிற்று.

சுந்தரரைத் தடுத்தாட் கொள்ளவந்த சிவபெருமானைச் சுந்தரர் அவரையாரென்றறியாது பித்தர் என்றார். சுந்தரர் இறைவனரை அறிந்த பின் அவரைப் புகழ்ந்து பாடினார். இறைவனரது கட்டளைப்படி எடுத்த எடுப்பிலேயே சுந்தரர் 'பித்தா பிறைசூடி' என இறைவனரைப் பித்தர் எனப் பாடினார்.

உலகில் எல்லோரும் பித்தரே. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றில் பித்து. அதுதான் வித்தியாசம். ஆன்மாக்களாகிய குழந்தைகளைத் தன்னோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற பித்து ஆண்டவனிடம் உண்டு. மன்றாடும் பாதம் ஒவ்வொரு ஆன்மாவையும் தன் திருவடி நிழலில் ஒதுக்கிக் கொள்ளுமாறு மன்றாடிக் கொண்டிருக்கிறதாம்.

இறைவனது திருவடியை இடைவிடாது நினைப்பவர் அடியார் ஆகின்றனர் அத்தகையவர்களுக்கு இறைவனைத்

தவிர உயர்ந்த பொருள் வேறு இல்லை. பெண்ணை இடைவிடாது நினைப்பவன் பெண் பைத்தியம் என்றும், பணத்தை இடைவிடாது நினைப்பவன் பணப் பைத்தியம் என்றும் பேசப்படுவது போலக் கடவுள் மேல் பைத்தியம் உள்ளவர்களைக் கடவுள் பைத்தியம் என்று கூறுவது உலக வழக்கு.

'நின் அடியாரில் ஏசப்பட்டேன்' என்கிறார் மணிவாசகர். இத்தகைய கடவுட் பைத்தியங்களை முத்தியாகிய மேல்நிலைக்கு ஏற்றி விடுவதற்கு இறைவன் ஏணியாகப் பயன்படுகின்றானும். இதனை நாவுக்கரசர்

'பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும் ஏணியை'

என்று குறிப்பிடுகின்றார்.

துன்பம் ஒரு கடல்; பிறவி பெருங்கடல். இறைவனடியைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெருங் கடலை நீந்துவர். சேராதார் நீந்த மாட்டார் என்பது வள்ளுவர் கருத்து. மனிதன் பிறந்த காலந் தொட்டுத் துன்பமாகிய சுழலுள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றான். அதனால் இளைக்கின்றான். துன்பக்கடலும், பிறவித் துன்பமும் நீங்க வேண்டுமானால் இறைவனைச் சேர்ந்து வாழ வேண்டும். கடலைக் கடப்பதற்குத் தோணி பயன்படுவது போலப் பிறவியாகிய துன்பக் கடலை நீந்துவதற்கு இறைவனே தோணியாக மாறுகின்றான். இதனை அப்பரடிகள்

'' இடர்க்கடலுட் சுழிக்கப்பட்டு இங்கு
இளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏறவாங்குந் தோணியை'

என்கின்றார். தொண்டு செய்பவன் தொண்டன் ஆகின்றான். வேலை செய்பவன் வேலைக்காரன். சேவை செய்பவன் சேவகன். தன்னலங்கருதாது பிறர் நலம் ஒன்றையே மனதுட் கொண்டு தொண்டு செய்பவர்கள் இறைவனுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களாவர். இவர்களே கர்மயோகி என அழைக்கப்படுவர்.

இறைவன் சோதிமயமானவன். அதுவும் தூயசோதி. மணிவாசகர் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி என்கின்ருர். சம்பந்தர் 'சுடர் விட்டுளன் எங்கள் சோதி' என்கின்ருர். சோதியாய் உள்ள பெருமான் வெள்ளிய சங்கு குண்டலங்களை அணிந்துள்ளான்.

பொன்னின் மாற்றை அறிய விரும்புவோர் உரைகல்லில் தேய்ப்பர். அதனை 'உரை ஆணி' என்பர். நாவுக்கரசர் தன்னைத்தானே இறைவனுகிய உரையாணியில் தேய்த்து மாற்று ஏற்றிக் கொள்ளுகின்ருராம்.

இத்தகைய இறைவனுர் திருவாவடுதுறையுள் இருக்கின்ருராம். அவரது திருவடியைத் தஞ்சமாக அடைந்து உய்ந்தேன் என்கின்ருர் அப்பர் அடிகள்.

பக்தர்களுள் இருவகையினர். ஒரு பகுதியினர் குரங்குக் குட்டி போன்றவர். மற்ற வகையினர் பூனைக்குட்டி போன்றவர். குரங்குக்குட்டி தாயைத் தானுக இறுகப் பிடித்துக் கொள்ளும். அதே போன்று முதல்வகைப் பக்தர்கள். இறைவனை நாடிச் சென்று இறுகப் பற்றிக் கொள்வர்.

பூனைக்குட்டி தன் முழுப்பொறுப்பையும் தாயிடமே கொடுத்து விட்டுத் தான் கவலையில்லாமல் தூங்கும். அதே போல இரண்டாவது வகைப் பக்தர்களும் தம்மை இறைவனிடமே முழுவதாக ஒப்புக் கொடுத்துக் கவலையற்று வாழ்வர். முன்னவர் பக்தர் எனப்படுவர். பின்னவர் பிரபன்னர் எனப்படுவர். முன்னவர் தாமே இறைவனைப்பற்றி உய்பவர்கள்; பின்னவர் இறைவனுற் பற்றப்பட்டு உய்விக்கப் படுவார்கள்.

இதனை நாவுக்கரசர் 'முத்தி காட்டும் ஏணி' என்றும் 'ஏறவாங்கும் தோணி' என்றும் குறிப்பிடுகின்ருர். அவரது முழுக் கருத்தையும் இப்போ பாடிப் பாருங்கள்.

பேணியநற் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை யிடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங்
கிளைக்கின்றேற் கக்கரைக்கே யேற வாங்குந்
தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

★★

# ஓடி வருவாயே!

— கொடிகாமம் எம். பூபாலசிங்கம் ( நாவலன் ) —

கடவுள் பலவிருந்தும் — முருகா
காணவிழியில்லை!
காட்சி பலவிருந்தும் — முருகா
காண ஒளியில்லை!

ஓடும் சுனையினிலே — முருகா
ஓடி விளையாடி!
நாடி வருகையிலே — முருகா
நாடி துடிக்குதடா!

பாடி வருகையிலே — முருகா
படியும் சறுக்குதடா!
ஓடி வருகையிலே — முருகா
உதடும் துடிக்குதடா!

கண்கள் இரண்டாலே — முருகா
காணும் காட்சி யென்ன?
பெண்கள் இருவரையே — முருகா
பேணி வைத்ததென்ன?

ஆறு பல கடந்து — முருகா
ஆறி வருகையிலே!
மீறிச் செல்லுதடா — முருகா
சீறும் பலசர்ப்பம்!

காடு கடக்கையிலே — முருகா
கண்ட காட்சியென்ன?
வீடு பேற்றையெல்லாம் — முருகா
வேண்டி நின்றேனே!

பாட்டுப் பலபாடி — முருகா
காட்டைக் கடந்து வந்தேன்!
வீட்டைத் தேடுகிறேன் — முருகா
பூட்டைத் திறந்து விடு!

வாடி வருவோரை — முருகா
நாடி அணைப்பவனே!
தேடி நினைத்தாலே — முருகா
ஓடி வருவாயே!

## காந்திஜீ பொன் மணிகள்

பிரார்த்தனை உண்மையானதாக இருக்க வேண்டுமானால் வெறும் ஜெபமாலையை உருட்டுவதாக இராமல், இதயம் அலையாமல் ஊன்றி நிற்க வேண்டும்.

★★

புலன்களைத் திருப்தி செய்ய மறுப்பதால் பலன் உண்டு. புலன்களை ஒறுக்காதவரை கடவுளைக் காண முடியாது.

★★

எது சரியாகத் தோன்றுகிறதோ அதைப் பயமின்றிக் கடைப் பிடித்து ஒழுக வேண்டும். பொய்யும் சூதும் இருந்துகொண்டு தானிருக்கும். நாம் சரியான காரியத்தைச் செய்தால் அந்த இரண்டும் குறையுமேயன்றி கூடா.

# இயற்கையே சோதிடம்

## பாடம்: 7. தாதுக்கள் ஏழு.

ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை.

சோதிடத்தில் ஏழாமிடம் களஸ்திரத்தானம். சப்த தாதுக்களாவன, அவை:- இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, என்பு, தோல் இவையேழுமாம். (சப்த சமுத்திரம், சப்த சுரம், சப்த ரிஷி இவை குறிப்பிடத்தக்கவை) இத் தாதுக்கள் ஏழிலும் சுக்கில மேகளாஸ்திர போகத்திற்கு முக்கியமாகும்.

பரம்பொருளால் வந்த தந்தையாகிய சுக்கிலத்தில் அப்பு, வாயு, தேயு மூன்றுமொன்று கூடி ஒளி ஒலி தாங்கி நாதவிந்தாகி கோச மூலமாக பிருதுவியாகிய சக்தியின் அம்சமாகிய தாயின் அல்குல் வழியாகச் சென்ற சுக்கிலம் சுரோணிதத்தில் சங்கமமானதும் கருவாகிறது. உடனே சப்த தாதுக்களும் உருவாகிறது. இதுவே பரம்பொருளின் அபூர்வ சக்தியாகும். இதுவே இயற்கையின் ஆக்கம். வாழ்க்கைத் தத்துவம்! சுதர்மம் இதுவே!

சேர்க்கை இயற்கையா? சேர்க்கையா? இயற்கை. இயற்கையில் பிரிவு இல்லையோ? உண்டு. ஆனால் அது பிரிவுக்கென்று நிகழ்வதில்லை. சேர்க்கையின் ஆக்கத்திற்கென்று நிகழ்வது. அப்பிரிவு தன்னை என்றும் நிலைபேறுக்கத் தோன்றுவதன்று. அது நிலையில்லாத ஒன்று. அத்தகைய பிரிவு எங்ஙனம் இயற்கையின் பாற்படுவது? செயற்கையாண்டில்லை. அது ஆண்டுமிருக்கின்றது. செயற்கை செறியாத இடமொன்றில்லை என்று சுருங்கக் கூறலாம்.

தத்துவக்கலையையும் தத்துவப் புவனங்களையும் எண்ணுவோமாக. அவை எங்கே தோன்றின? எங்கே போகின்றன? திரிகின்றன!! எங்கு சென்றாலும், முட்டி மோதின

லும் முடிவைப்பற்றிய தத்துவங்கள் உலகில் பல அறிவிப்புகள் நிகழ்கிறது. தத்துவங்கள் அணு அணுவாய் நுணுகி நுணுகி ஒளியாய் ஒலியாகும். இவ்வடிவு மாறுந்தன்மையுடையது. மாயை பொருளென்றும், அல்லவென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்கும் ஐயப்பாடுகளிருந்து வருகிறது. மக்கள் மெய்யுணர்ச்சி பெறும்வரை ஐயப்பாடுகளிருந்து வரும். பொதுவாக நாம் மாயையைப் பொருளென்றே கொள்வோம். எல்லா உலகிற்கும் மூலகாரணமான மாயையின் தொடர்புகளுண்டு. மாயை முதல் ஒலியாகிறது. ஒலி ஒளியாகிறது. ஒளியிலிருந்து பல விதத் தத்துவங்கள் தோன்றுகின்றன.

இத்தத்துவங்கள் கலையாகவும் புவனங்களாகவும் உருவெடுக்கின்றன. இவையனைத்தும் படிப்படியே செயற்கை பெற்ற திறங்கள் சிந்திக்கத்தக்கன. கலை, மூலமாகிய மாயை ஒலியாய், எழுத்தாய், சொல்லாய், தொடராய் பகுதிகளாய் நூலாகிறது. நூல் பலவகை சேர்க்கை கொண்ட ஒரு பிண்டம். புவனமும் பலதிறச் சேர்க்கை பெற்ற ஒரு பிண்டமே. மாயா ஒலித்திறன் அணு அணுவாய்ச் சேர்ந்து, சேர்ந்து புவனமாகிறது! புவனம் சேர்க்கையின் ஆக்கமா? அன்று? சிந்தியுங்கள்! கலைகள் எவ்வளவு? புவனங்கள் எவ்வளவு, அவ்வளவும் சேர்க்கையே.

கலைகளில் பெரியது இலக்கியம். இக் கலைகளைப் பார்த்தாலும் பலவித சேர்க்கைகளைப் பெற்ற ஒன்று என்பது நன்கு விளங்கும். உதாரணத்திற்குத் தொல்காப்பியமே போதும். உலகத்தையே தொல்காப்பியம் என்று சொல்லலாம். உலகமும் ஓர் காப்பியமே. தொல்காப்பியத்தின் வயதென்ன? கோடிக்கணக்கில் கூறலாம். அகத்திய முனிவரைத்தான் கேட்கவேண்டும். தமிழில் முதன்முதல் வடிக்கப் பெற்றது. அதுவே 'தொல்காப்பியம்' என்னும் தமிழ்க் கலை. இதன் சேர்க்கைகள்:

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்,

பொருளதிகாரம் என்ற மூன்றும் ஒரு பெரிய நூல். எழுத்து ஒலியின் சேர்க்கை. சொல் எழுத்தின் சேர்க்கை. சொல்லின் சேர்க்கை பொருள். பொருளில் என்ன சேர்க்கை பேசப்படுகிறது? உலகச்சேர்க்கை பேசப்படுகிறது.

பிரிவும், அமைப்பையும் கவனிப்போம். தொல்காப்பியப் பொருளில் நால்வகை நிலங்கள் அவ்வந் நிலத்துக்குரிய மரங்கள், பூக்கள், பறவைகள், விலங்குகள், மக்களினங்கள் பெண், ஆண் வாழ்க்கை வழக்க ஒழுக்கங்கள் செய்யுள் யாப்பு முதலியன ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஓவியங்களும் ஒன்று சேர்ந்து நிற்கின்றன.

நால்வகை நிலங்கள் பிரிவாகவில்லை. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பாலானதே நாம் வாழுமுலகம். நாம் வாழுமுலகம் தனித்தா நிற்கின்றது. அது சேர்க்கை பெற்றே நிற்கின்றது. நாம் வாழுமுலகம் ஞாயிற்றைச் சுற்றுகிறது மற்றக்கோள்களும் உலகங்களுமவ்வாறே சுற்றுகின்றன. அவ்வுலகங்கள் ஒவ்வொன்றும் ஞாயிற்றின் கதிரொளியால் உறவு கொண்டு எவ்வித முட்டுமின்றிச் சுற்றிச் சுழன்று வருவதே. நெஞ்சே நினைந்து பார். பிரிவை நினையாதே. சேர்க்கையை நினை. நீ வாழ்வாய்! உலகமும் வாழும். எல்லா உலகங்களும் சூரியனும் ஒருவர் உதவியை ஒருவர் நாடிய படியேயிருக்கின்றன. இனம், புல் செடி, கொடி மரம், புழு பறவை, விலங்கு மனிதர் முதலியவற்றைப் பாருங்கள்! ஒவ்வொன்றும் தன் தன் கூட்டத்துடன் சேர்ந்து வாழ்கின்றன. புல்லில் பல இனமிருக்கின்றன. எல்லாம் சேர்ந்தே புல் என்ற பொதுப்பெயரைப் பெற்றிருக்கிறது. இவ்வாறே மரம்; மரவினம், புழு; புழுவினம் மீன்; மீனினம், பாம்பு; பாம்பினம், பறவை; பறவையினம், விலங்கு; விலங்கினம் மக்கள், மக்களினம் முதலிய வழக்காறுகள் தோன்றின. வகைக்குள் தொகைகள் துலங்குகின்றன. அவற்றுள் சேர்க்கை சிறத்தல் சிந்திக்கத் தக்கது.

சாதி சமயம் நிறம் மொழி நாடு முதலியவற்றிலும் வகையும் தொகையும் தொடர்பு பெற்றுள்ளன. மனித வகுப்பு ஒன்று. அதில் எத்தனையோ தொகுப்புகளிருக்கின்றன. அவ்வாறே சமயம் முதலிய ஒவ்வொன்றிலும் தொகுப்புகளுண்டு. தொகுப்புகள் திரண்டு திரண்டு வகுப்புக்களாதலை உன்னிச் சேர்க்கை நுட்பத்தை உணர்வது அறிவுடைமை. உலகம் சரம் அசரம் அஃறிணை உயர்திணை என்றும் வகுக்கப்பட்டிருப்பினும் எல்லாம் சேர்ந்த ஒன்றே உலகம். செயர்க்கையின்றி உலகம் நிலவாது, வாழாது.

வளர்ச்சியை ஆராய்ந்தால் ஒன்றிலிருந்தே பலவகை உடலங்கள் தோன்றிய நுட்பம் தெரியவரும். முதல்முதல் ஒரு பெண் தாது பிறந்தது. அதிலிருந்து ஓர் ஆண் தாது பிறந்தது. இரண்டும் சேர்ந்து சில தாதுப் பொருட்களை ஈன்றன அவற்றிலிருந்து புல் செடி கொடி மரங்களும் மீன் புழு பாம்புகளும் பறவைக் கூட்டங்களும் விலங்கினங்களும் குரங்கு மக்கள் குழுக்களும் தோன்றின. இவ்வளர்ச்சியில் பல வித தத்துவங்களுக்கும் சேர்க்கை வேண்டுமென தெளிக.

மக்கள் வாழ்க்கை வீட்டில் தொடங்குகிறது. அங்கே சேர்க்கை தொடருகிறது. அவ்வீடு தெருவாய், ஊராய், வட்டமாய், மாவட்டமாய், நாடாய் உலகாகிறது. இதில் சேர்க்கைத் திறம் தெரிகிறது. இதில் திருவள்ளுவர் காதல் மணம் சிறந்ததென்கிறார், அஃது இயற்கைச் சேர்க்கை என்கிறார். அதை அவர் அருளிய திருக்குறளில் பார்க்கலாம். திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் முப்பாலுடையது. திருக்குறளில் காமம் காதலை உணர்த்துவது. காமத்திற் சிறந்தது, காதற்காமம் என்று பரிபாடல் பகர்கிறது. பொருட்பாலும் அறத்துப்பாலும் காமத்துப்பாலின் அரசுகளாகும். காமத்துப்பாலில் காதல் மணம் கமழ்கின்றது. காதல் இயற்கையிலுள்ளது அஃது ஈருயிரை ஒன்று சேர்ப்பது. காதல் ஈருயிரை ஒன்று

படுத்துமளவில் நின்று விடவில்லை. அது குழந்தையாக மலர்கிறது. அது அன்பாகிக் குடும்பமாயமையவும் தோன்றாத் துணையாக நிற்கிறது. அன்புக் குடும்பம் அஃது ஊராய் நாடாய் உலகமாகிறது. உலகமே ஓர் பெரிய குடும்பம். காதற் சேர்க்கை கனிந்து, கனிந்து தெய்வீக அன்புச் சேர்க்கையே பரம் பொருளின் சேர்க்கையாகும். இத்தெய்வீகக் காதலுக்குச் சாதி சமயம் நிறம் மொழி ஊர் அரசியல் உற்றார் பெற்றாரெவரும் தடை போட முடியாது. இனிவரும் விஞ்ஞான உலகில் எல்லோரும் ஓர்குலம் எல்லாருமோரினம் எல்லார்க்கும் தெய்வமொன்றே. இதுவே இயற்கையின் தத்துவமாகும்.

★ ★ ★ ★ ★ ★★ ★ ★ ★ ★ ★ ★

உ

# தியான காலம்

மனிதன் உலகத்தை மறந்திருக்கும் காலங்களும் உண்டு ஆன்மா தானே தானாய் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதான் சந்நிதியில் நிற்கும் ஆனந்த நிலையை அணுகும் காலங்களும் உண்டு. அங்கே ஆசையின் ஆரவாரம் யாவும் அடங்கி விடுகின்றன. ஐம்புலன்களும் ஒன்றுபட்டொடுங்கி நிற்கின்றன. இறை மயம் மிளிர்கின்றது.

தூய்மையான மனம் — இறைமயமான மனத்தைக் காட்டிலும் தூய ஆலயம் பிறிதில்லை. மனம் இறைவனிற் பதிந்திருக்கும் பொழுது அடையும் சாந்த நிலையிலும் மேலான பரிசுத்த தலம் வேறில்லை. கடவுட்டியானத்தைக் காட்டிலும் சிறந்த பரிமளதூபமும் பிறிதில்லை. தூய்மையே ஆனந்தமே, சுகமே, சாந்தமே என்றிவையே தியான நிலையில் நிறைந்திருக்கும் சிறந்த குணங்களாகும்.

ஓம்

# அம்ம நாம் அஞ்சுமாறே

(செல்வி: பூ. தம்பையா)

அன்பையே நுதலிய உலகில் மக்கள் பேயென்றும், பிசாசென்றும் விலங்கென்றும், மரணமென்றும், போரென்றும், பஞ்சமென்றும், சாதியென்றும் எதை எதையோ சொல்லிக்கொண்டு அஞ்சுகின்றனர். இவ்வாறு அஞ்சிவரும் உலகை நோக்கி முடிவு ஒன்று காட்டும் மாணிக்க வாசகர் 'அம்ம நாம் அஞ்சுமாறே' என்கிருர். இதன் மறை பொருள் இறைவனிடம் அன்பில்லாதவரைக் கண்டாலன்றி நாம் எடுத்தவற்றுக்கெல்லாம் அஞ்ச வேண்டியதில்லை.

அன்பினுல் இயங்கிவரும் உலகில் அன்பினுல் உயிர்கள் பிறக்கின்றன. அன்பினுல் வளர்கின்றன. அன்பையே அடைய நிற்கின்றன. அந்த அன்பு தான் சிவம் எனக் கண்டனர் அன்பர்கள். இதனை அன்பனுகி அன்பைக்கண்ட திருமூலர்

'அன்பே சிவமாவது ஆருமறிந்த பின்
அன்பே சிவ மாயமர்ந்திருப்பாரே' என்றும்

உமாபதி சிவம் 'அன்பு நிலையே அது' என்றும் 'இன்ப–கனம்' என்றும் அடையாளம் காட்டினர். இத்தகைய அன்பே வடிவாகிய இறைவன் எங்கும் எவையும் எரியுறு நீர்போலத் தங்கியுள்ளான். இதனைக்கண்டு ஆனந்தமடைபவர் அன்புடையோர். அன்பிலார் அச்சம் அடைவர்.

இவ்வச்சமானது இருவகையில் தோன்றுகின்றது. ஒன்று அன்பு காணுத விடத்துத் தோன்றுவது. மற்றது அன்பு அகத்தின்மையால் தோன்றுவது. அன்பு காணு விடத்துத் தோன்றுவது அன்புவழி வந்த அறிவோடு கூடியது அன்பகத்தின்மையால் தோன்றுவது அன்பு வழிவராது அறியாமையோடு கூடியது. கண்டவற்றுக்கெல்லாம் அஞ்சுவது அன்புடையோர் அகத்தன்றிப் புறத்திலும் அன்பைக் காண்டலின் கண்டவற்றுக் கெல்லாம் அஞ்சமாட்டார்கள். இதனுல் தான் ''புற்றில் வாழ் அரவும் அஞ்சேன்'' என்று

மணிவாசகரும் '' நமனை அஞ்சேன் '' என்று நாவுக்கரசும் ''மரணப் பிரதாபம் எமக்கில்லை'' என்று அருணகிரியும் அறிவுறுத்தினர்.

'கோளரி உழுவையோடு கொலையானை கேழல் கொடு நாகமோடு கரடி – ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்குமிகவே' என அன்பு பாராட்டுகிறார் ஆளுடைய பிள்ளை. எமக்கு அச்சந்தருபவை அன்பர்கட்கு ஆனந்தத்தை ஊட்டுகின்றன. கரியானையுரி போர்த்தவன் இறைவன். புலித்தோலை ஆடையாக அரைக்கசைத்தவன். ஏனத் தெயிறையும், அரவையும் ஆபரணமாக அணிந்தவன் ஆதலின் அரவும் ஆளரி முதலாயினவெல்லாம் இறைவனை நினைவுறுத்தும் சின்னங்களாக விளங்கியதைக் கண்டார் ஆளுடையபிள்ளை. அன்பின் சாயல் கண்டவிடத்தும் அன்பாகிய முழுமுதற் பொருளே காணப்பட்டது. அகத்தில் இருப்பது தான் புறத்திலும் காணக் கிடைப்பது. அகத்தில் அன்பின்றிப் புறத்தில் அதைக் காண முடியாது. எம்மிடம் அகத்தன்பு இன்மையால் தான் புறத்தில் காண்பவற்றுக்கெல்லாம் அஞ்சுகின்றோம். நாம் பிறிதிற்கு அஞ்சுவது போல எம்மைக் கண்டு பிறரும் அஞ்சும் படியாக இருக்கின்றோம். அஃறிணைப் பொருட்களே அன்பின் சின்னங்களாக விளங்க உயர்திணைப் பொருளாகிய மனிதன், அன்பின் வடிவாக இருக்க வேண்டி மனிதன் அன்பின் சாயலேனும் இல்லாதிருப்பானுனல் அவனுக்காகவே நாம் அஞ்சவேண்டும் என்கிறார் மணிவாசகர். அவன் கொடிய நாகத்திலும் கொல்லும் விலங்கிலும் கொடியவன் என்பதைச் சொல்லாமற் சொல்லுவார் 'புற்றில் வாழரவு மஞ்சேன்' என்றெடுத்து 'அன்பிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே' என்று முடிப்பதனுல் உணர்த்தினர்.

அன்பிற்குச் சாதியில்லை. சமயமில்லை. பெருமை சிறுமையில்லை. அது இன மொழிக்கப்பாற் பட்டது. எனினும் மனிதன் தன் அறியாமையினுல் அன்பிற்கு எல்லை வகுக்

கிறுன் சாதி சமயத்திற்குட் பட்டதாகக் கருதுகிறுன். தன்னேடு பிறப்பால் ஒத்த ஒருவனைத் தீண்டாதவன் என்று ஒதுக்குகிறுன். அவனுக்கு என்றெரு நீதி, அவனுக்கு என்றெரு சட்டம் அவனுக்கு என்றெரு ஒழுங்கு கற்பித்துக் கொண்டு அடக்கு முறையால் அன்பு பாராட்டுகிறுன். கீழ்சாதி மேல்சாதி என்று சுட்டுகிறுன் நாம் எதற்காகப் பிறந்தோம் என்பதை விட்டு, பிறப்பால் ஒத்த வேறு ஒருவனின் பிறவியை ஆராய முற்படுகிறுன். உயர்வு தாழ்வு கூறி அன்பை மறக்கிறுன். அன்பைச் சாதிக்கப் பிறந்த மனிதன் அன்பல்லா நெறிபுக்கு அருமையாகக் கிடைத்த பிறவியையும் அவமதிக்கிறுன். தான் தவறுவது மல்லாமல் பிறரையும் அன்பல்லா நெறியில் வழி நடத்த முனைகிறுன். இத்தகையோரையே அன்பிலார் என்கிறுர் மணிவாசகர். ஒருவன் கெட்டழிவதற்கு காலதாமதம் வேண்டியதில்லை. ஆனுல் ஒருவன் நல்ல மனிதன் கூறுமளவிற்கு உயர்வுடையவனுக வரவேண்டில் எவ்வளவோ காலமாகும் இவ்வாறு கிடைத்த ஒன்றே மனிதப்பிறவி. இத்தகைய பிறவியைப் பெற்ற ஒருவன், பிறவிப் பயனைத் தானும் அடையாது பிறரையும் அடையவொட்டாது வஞ்சித்து வாழ்வானுனுல் அவனிலும் அன்பிலார் இவ்வுலகில் இல்லையென்றே சாதிக்கலாம். இத்தகைய அன்பிலார் கொடுந் தன்மையை உணர்த்துதற்காகவே மணிவாசகர் வார்த்தை அன்பிலாதவரைக் கண்டால் நாம் அஞ்சுமாறு என்று நில்லாமல் 'அன்பிலாதவரைக் கண்டால் அம்ம' என அதிசயித்தவாறு நாம் அஞ்சுமாறே என அமைந்தது.

தீண்டாதவன் ஆலயத்துள் செல்ல அனுமதிப்பதில்லை. அவன் செல்லவும் கூடாது என்பது ஒரு மரபாகி வந்து விட்டது. அவனுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்திலே நின்றுதான் இறைவனை வணங்க முடியும். தற்செயலாக அவன் உள்ளே சென்று விட்டால் ஆலயக்கதவு தாழிடப் படும். அமைதிக்கும், அன்பிற்கும் உறைவிடமான ஆலயம் ஆரவாரத்திற்கிடமாகும். நித்திய நைமித்தியங்கள் கூட நடவாது. அப்படி நடப்பதானுல் தாழிடப்பட்ட கதவு

டனே தான் நடைபெறும். இத்தகைய நிலைக்கு மனிதன் தாழ்த்தப்பட்டுள்ளான். இந்த உடல் ஒரு ஆலயம். இதன் புறத்தோற்றமே நாம் வணங்குகின்ற ஆலயங்கள் என்பதை அவன் உணர்வதில்லை. ஆலயத்துள் இறைவன் எழுந்தருளியுள்ளான் என்பதை காண்கின்ற மனிதன், இந்த உடலாகிய ஆலயத்துள் உயிர்க்குயிராக விளங்குகிறுன் அவன் என்பதை உணர்கிறுனில்லை. ஆலயக்கதவை இழுத்து மூடுகிறுன். வகை தெரியாமல் தனக்குத் தானே தாழிட்டுக் கொள்வதை உணர்வதில்லை. இந்த உடலிலும் சிறந்த ஒரு ஆலயத்தைக் காணவோ, கட்டவோ அவனுல் முடியாது. ஆலய வணக்கத்தின் நோக்கம் என்ன? என்பதின் உண்மையைக் காணுகின்ற அளவு மனம் அன்பு நெறியில் நிற்காமையே இக்குறைபாட்டின் காரணமாகும். கல்லாற் சமைத்து அங்கு கடவுளைக் கண்டு வணங்கும் ஆலயங்களைப் படமாடும் கோயில் என்றும், உடலெடுத்த உயிர்களை நடமாடும் கோயில் என்றும் வர்ணிக்கின்றுர் திருமூலர். நடமாடும் கோயில்களாகிய உயிர்கட்குச் செய்யும் அன்பு இறைவனுக்கு நாம் நேரே செய்கின்ற அன்பாகும் என்பதை;

> 'படமாடும் கோயில் பரமர்க்கொன்றீயின்
> நடமாடும் கோயில் நம்பர்க்கங்காகா
> நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றீயின்
> படமாடும் கோயில் பரமர்க்கதாமே' எனும்

திருமந்திரத்தால் விளக்கினர். இறைவனை அன்பு செய்து அடைவதற்காகவே உயிர்கள் பிறக்கின்றன. உயிர்கள் தோறும் இறைவன் உறைகிறுன். உயிர்களிடத்து நாம் வைக்கும் அன்பு இறைவனிடத்து வைக்கும் அன்பாகிறது. ஆதலின் நாம் பிற உயிர்களிடத்து அன்பு வைக்காவிட்டால் அது இறைவனை அவமதிப்பதாகும்.

ஒருவன் எக்குலத்தவனுயினும் அன்புடையவனுயின் அவன் இறைவனுக்குப் பாத்திரமானவனே. அன்பிற்குக் குலமில்லை. குலமிலா அன்பிற்குக் குலப்பெயரால் மாசு

கற்பிக்க முனைபவரிலும் அஞ்சத்தக்க அன்பிலாரைக் காணவே முடியாது. இத்தகையோருக்கு நல்ல ஒரு பாடம் கற்பித்தான் இறைவன். இழி குலம் என்று கருதப்பட்ட சாம்பானுக்காகத் திருமுகம் வரைந்தார். எடுத்த எடுப் பிலே அன்பின் தூய்மையை விளக்க அடியார்க்கு எளியவன் என்று தொடங்குகிறார்.

'அடியார்க் கெளியவன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப் — படியின்மிசை
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்கை முறை' என்று

திருமுகம் அமைந்தது. திருமுகம் கண்டு பரவசமுற்ற உமா பதிசிவம் பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து முக்தி கொடுத்தருளினர்.

அன்பின்மையே எமக்கு அச்சத்தைத் தருவது. இத் தகைய அச்சத்தை அன்பினால் தான் நீக்கமுடியும். அன் பிலா விடத்தில் அச்சம் அகலாது. அச்சம் கொடிய தீவி னைகளையும் செய்யத் தூண்டும். ஆதலின் நாம் அன்புடை யோராக வாழவும், பிறரையும் அன்பு பாராட்டி வாழ வும் கற்றுக் கொள்ளவேண்டும் இவ்வாறு அன்பு வாழ் க்கை வாழ்ந்தார்கள் அடியார்கள். ஆதலின் அன்னார் வாழ்க்கை நெறியை நாமும் பின்பற்றி ஒழுக வேண்டும். அவர்கள் கூறும் உண்மைகளில் நம்பிக்கை கொள்ள வேண் டும். அவர்கள் எம்மை இறைவனோடு தொடர்புபடுத்துவ தில் ஈடு இணையற்றவர்கள். முன்பு தெரியாத ஒருவரை நாம் அறிவதற்கு அவரோடு தொடர்புடைய ஒருவரைத் துணை கொள்ளுமாறு; இறைவனோடு தொடர்புடைய அடி யார்கள் நாம் இறைவனை அறிவதற்கு இன்றியமையாத வர்கள் அவர்கள் அன்பே வடிவாயமைந்தவர்கள். இறை வனை யன்றி நினைப்பறியாதவர்கள். சிவஞானமன்றிப் பேசியறியாதவர்கள். சிவ தொண்டன்றி வேறு தொண்ட றியாதவர்கள். அச்சத்தை அன்பினால் துடைத்தவர்கள். அன்பினால் மரணத்தை வென்றவர்கள் இதனாலே தான்

'நமனை அஞ்சேன்' 'நாமார்க்கும் குடியல்லேன்' என்ற நாவரசர் கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோம் என்ற மரணப் பிரதாபமில்லை' என்ற அருணகிரி வாய்த்த துணை கிரணக் கலாபியும் வேலும் என்றார். ஆதலின் அன்பர் கள் காட்டிய நெறி நின்று அச்சமகற்றி அன்பை அடை யப் பழகிக் கொள்வோமாக.

# தியான காலம்

அமைதியும் தூய்மையும் நிலவுங் காலங்களில் ஆத்ம தரிசனம் கைகூடுகின்றது. ஆத்மா தனது உற்பத்தி ஸ்தா னத்தை அணுகி நிற்கின்றது. ஆத்மபோதம் சிற்றாறு, இச்சமயங்களில், விசாலித்து, வலிமையும் வேகமும் உள்ள ஒரு பேராறாகி சத்திய நித்தியப் பொருளாயுள்ள மெய்யு ணர்வென்னுஞ் சமுத்திரத்தின் திசையை நோக்கிப் பாய் ந்து செல்லும். இதுவே காண்டற்குரியது.

தியான காலங்களில் ஆன்மாவானது பரம்பொருளின் மேலான இயல்புக்குரிய பயமின்மை, உண்மையுணர்ச்சி, மரணமின்மை யுணர்ச்சி ஆகிய தன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றது.

ஓ ஆன்மாவே! உண்மையிற் பதிந்து அமைதியுடன் நிற்கும் காலத்தைத் தேடு. உண்மையும் தெய்வீகத் தன் மையும் உன்னிடம் இயல்பாகவே உள்ளனவென்பதை அறிவாயாக. உண்மையாகவே உள்ளத்துள் இறைவன் உறைகின்றான்.

# உண்மை வழியே உயர்ந்த சமயம்

( எழுதுபவர்:— அருள் சத்தியநாதன் )

கொடி வளர்கிறது.

வளருங் கொடி, தனக்குத் துணையாக ஒரு ஆதாரத்தைத் தேடிக் கொள்கிறது. அதற்கு அந்த துணை கிடைத்திருக்காவிடின், அதனால் அது பிறந்த பயனைச் சிறப்புடன் செய்ய முடியாது. கொடி, துணையைப் பெற்ற பின்புதான் அதனைச் சுற்றிப் பற்றி செழிப்புடன் வளர்கிறது. இது போலவே,

மனிதன் என்ற கொடிக்கு, சமயம் என்ற கொழு கொம்பு காலத்திற்குக் காலம் தேவைப்பட்டு வருகிறது. சமயம் இல்லாதிருந்தால் துணையற்ற கொடியின் கதியையே மனித வர்க்கம் அடைந்திருக்கும் ஏனெனில்,

சமயமே கலையைப் படைத்தது. சமயமே கலாச்சாரத்தைப் படைத்தது. அதுவே பண்பாட்டைப் படைத்தது நாகரீகத்தை படைத்தது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியன, சமயமின்றித் தோன்றியிருக்க முடியா. மொத்தத்தில்,

காட்டு மிராண்டியை ககனத்தினுள் காலடி வைக்கச் செய்தது சமயம் என்ற ஒழுங்கு முறையே!

சமயத்தை – உயர்ந்த ஒழுங்கு முறையை-காலத்திற்கு காலம் மகான்களும், ஜீவன் முக்தர்களும் தோன்றி, அதற்கு மெருகு ஏற்றி வந்தார்கள்.

ஆனல் நாளடைவில் சமயம் என்பது சடங்காக சம்பிரதாயமாக ஆகிவிட்டது என்றே சொல்ல வேண்டும். இடையிடையே இந் நல்வழியில் வந்து படிந்து கொண்ட சடங்குகளும், சம்பிரதாயங்களும் மக்கள் வாழ்வோடு பின்னிக் கிடந்த சமயத்தை, மக்களால் அணுக முடியாத இடத்திற்குத் தள்ளி வைத்தன. அது உண்மையில்லை

என்று வைத்துக் கொண்டாலும், அப்படியொரு மனப்பிராந்தியை மக்கள் மனதில் ஆழப் பதித்து விட்டன. சமயம் ஒரு சிலரின் சொத்தாகியது. இந்நிலையில் இன்றும் முற்ருக மாறவில்லை என்றே கூறவேண்டும். சமயத்தின் உண்மையான தோற்றத்தை வெளிச் சடங்குகள் மறைக்க சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கடைப் பிடித்தால் தான் மோட்சம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவே, சமயிகள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அவரவர் சமயங்களை மேலோட்டமாகக் கவனியாது, ஒவ்வொன்றும் பேசும் தத்துவங்களையும் ஆழ்ந்த கருத்துக்களையும் நாம் உணர்ந்து உய்ய முயல வேண்டும்.

### எங்குமுள்ள இறைவனை சில இடங்களில் மாத்திரம் காண முயலலாமா?

பகுத்தறிவு வாதிகள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள், சமயம் என்ற கடவுள் வழிபாட்டு முறை அவசியமற்றது, வீணனது என்று பேசுகின்றனர்.

நாம் சமயங்களையும், அதற்குரிய கடவுளர்களையும் தொழுவது பலவகைப்பட்ட ஆசார, அனுஷ்டானங்களைப் பின் பற்றுவது ஆதியன அவசியமற்ற செயல் என்பது இவர்கள் வாதம்.

இவர்கள் இப்படியான கருத்துக்களை மாக்ஸ் தத்துவத்தின் அடிப்படையிலும் மாவோவின் கொள்கையின் பிரகாரமும் உருவாக்கி சொல்லுகிருர்கள். அந்த நோக்கில் இதனை பார்க்கும் பொழுது, இக்கூற்று எத்தனை தவருனது என்பது உங்களுக்கு தெளிவாக விளங்கும்.

ஆனுல் இதே வாக்கியம் எங்குமுள்ள இறைவனை சில இடங்களில் மாத்திரம் காண முயலலாமா? என்ற கேள்விக்கு விடை காணும் பொழுது உண்மையான ஒரு சொற்ருெடராக மிளிர்கிறது. எப்படியெனில்,

அத்வைத கோட்பாட்டினை ஏற்றுக் கொள்ளும் அனைவரும் தானும் தனக்கு அப்பாலுள்ள அனைத்தும் பிரம்மமே

யன்றி வேறில்லை என்பதை அறிகிறார்கள். அப்பொழுது எண்ணம், சொல், உருவம், அருவம், ஒளி, ஒலி அனைத்தும் அவன் வணங்கும் சக்தியாகவே இருப்பதை அவன் அறிவான். அப்படி அவன் அறியும் பொழுது பகுத்தறிவு வாதிகள் அனுவசியம் என்று பேசும் சமயம் என்ற ஒவ்வொரு கூட்டம் பின்பற்றும் வழி முறைகளும், கடவுள்களும் மாறுபட்ட ஆசார அனுஷ்டானங்களும் - நாம் அவசியம் அது ஆசாரம் என்று கருதுபவைகள் - அவனுக்கு அவசியமற்றதாகவே ஆகிவிடும். காணும் ஒவ்வொரு பொருளிலும் பிரமத்தை அறிபவன் தர்மத்திலும், சேவையிலும் வழிபாட்டைக்காண்பவன் கோயில் குளம் ஏறி இறங்கிக் கொண்டிரான்.

நாளெல்லாம் சத்தியத்தை போதித்து ராமசெபம் செபித்த இருபதாம் நூற்றாண்டின் சத்திய ஜோதி மகாத்மா காந்தியடிகள், கோயில் குளம் என்று சென்று கொண்டிருந்ததில்லை. சத்தியமே கடவுள் என்றும், சேவையே வழிபாடு என்றும் சொன்னவர் எமது அடிகள். நாம் நம்மை உணர்ந்து கொள்ளல் என்பதை நாம் தெரிந்து கொண்டால் அப்பால் எதுவுமே எம்மைக் கட்டுப்படுத்தாது என்று நம்பியவர் காந்திஜி. இச்சமயத்திலே இமயத்தில் சிவானந்தா நகரிலிருந்து ஒலிக்கும் ஸ்வாமி ராமானந்தாவின் மொழிகளை பார்ப்பது மிகுந்த நன்மையைத் தருவதாக இருக்கும்.

நீ அதுவாக இருக்கிறாய் என்று மஹாவாக்கியம் பேசுகிறது. அவனுக்குள்ளே எல்லாவிதமான சக்திகளும் இருக்கின்றன.........கோயில்களையும் புண்ணிய சேத்திரங்களையும் சுற்றி அலைந்து கொண்டிருப்பது அறியாமையே.........அழகான உடம்பின் மீது வெறுக்கத்தக்க சாம்பலைப் பூசிக் கொள்வதும், உருத்திராஷம் முதலியன அணிந்து கொள்ளுதலும் மனம் ஸ்திரமாக இல்லாத காரணத்தால் தான்..... பால் மற்றும் மதிப்புள்ள பொருட்களை கற்சிலைகளின் மேல் கொட்டுவது, முற்றிலும் பயனற்றது, இவ்வாறு சுவாமி ராமானந்தா பேசுகிறார்.

இவ்வுண்மையை உணர்ந்து, இதன் வழி நடக்க நாம் முயன்ருல் சமய அனுஷ்டானங்களை நாம் துறக்க வேண்டியவர்களாவோம். அப்படி செய்ய முற்படுவது நன்ருயினும், அதற்குள் பல துன்பங்களை, மனக் குழப்பங்களைத் தாங்க வேண்டியிருக்கும். அப்பொழுது, அவற்றைத் தகர்த்தெறிய குலையாத மன உறுதி வாய்க்கப் பெற்றிருக்க வேண்டும், அப்படியான மன உறுதி வாய்க்கப் பெற்றிருக்க வேண்டுமெனில்,

நமது இன்றைய நிலையை விட, ஓரளவு ஆத்மீக முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும்!

'எங்கும் இறைவன் உள்ளான்; அவனை எங்கும், எந்நிலையிலும் வணங்கலாம்' என்று நாம் சொல்ல வேண்டுமானுல், அதற்கான தகுதியை நாம் பெற்றிருக்க வேண்டும் ஏனெனில்,

உண்மையாகவே நாம் ஆத்மீகத் துறையில் கீழ் நிலையிலேயே இன்னும் நிற்கின்ருேம். எமக்கு இறைவன் தூணிலுமிருக்கிருன், துரும்பிலுமிருக்கிருன் என்ற வாக்கு வாய்ச் சொல்லாக மட்டுமே இருந்து வருகிறது. நாம் அதன்படி நடக்கத் தயாரில்லை. அதற்குக் காரணம், எமது அவநம்பிக்கையே! இது உலக மக்களிடையே பரவலாக உள்ள ஒரு மனப்பான்மை! ஆகவே,

இப்படியான மனத்தைப் பெற்றுள்ள எமக்கு கோயில் எனப்படும் வழிபாட்டு மண்டபமும், விக்கிரகங்களும், வழிபாட்டு முறைகளும் இன்றி, இறைவனைத் தொழ இயலவில்லை. 'இங்கே கடவுள் வாசம் செய்கிருர்' என்ற நம்பிக்கையோ என்னவோ இதற்குக் காரணம்? இந்த நம்பிக்கையைப் பெற்றுள்ள எமக்கு கோயிலைத் தவிர வேறு எங்குமே கடவுளைக் காண இயலவில்லை. காணிக்கை இடுவதைக் காட்டிலும் வேறு ஒரு தர்மத்தை செய்யத் தெரியவில்லை. ஆடு, கோழி பலியிடுவதைக் காட்டிலும் வேறு ஒரு சேவையை செய்யத் தெரியவில்லை. இதனை ஒவ்வொரு

இந்து சமயத்தவனும் உணர்ந்து கொள்ள வேண்டும். நான் மேற் சொன்ன ஆலய வழிபாட்டிற்கு மேலாக சேவை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு உண்மை ஆகியனவும் சிறந்த கடவுள் வழிபாட்டு முறைகள் ஆக இருக்கின்றன என்பதை இந்து சமயத்தவர்கள் மாத்திரமல்லர் தம்மை சமயிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அனைவருமே இதனை மனத்திலிருக்கச் செய்ய வேண்டும். ஏனெனில் ஆலயத்தினுள் செய்யப்படும் வழிபாடோ, பூசையறைக்குள் நடத்தப்படும் வழிபாடோ, எமது தேவைகளையும், குடும்பத்தின் குறைகளையும் மா த் தி ர ம் நிறைவேற்றிக் கொள்வதனைக் குறியாகக் கொண்டது – பெரும்பாலுமாக அது வழிபாடு ஆகாது! ஆனல்,

நான் மேலே சொன்ன ஒழுக்க முறைகளில் அழுத்தமாக நடந்து கொள்பவனே தன்னை மாத்திரம் தூய்மையாக்கிக் கொண்டதோடு விடாது. அனைவர்க்குமே நன்மை செய்பவனுக, தூய்மை படுத்துபவனுக இருப்பான். எல்லா வழிபாடுகளைப் பார்க்கிலும் இது மிக மேலானது. இம்முறை, புனித விவிலிய நூலில் (Holy Bibile) 'பிறர் சினேகம்' என்ற சொற்றெடரில் பேசப்படுகிறது. ஆண்டவரான கிறிஸ்து பெருமான் உன் சகோதரனை சினேகியாதவன் என்னை எப்படி சினேகிப்பான்? என்று எம்மை நோக்கிக் கேட்கிறுர்.

### சத்தியமே இறைவன்

இறைவனே சத்தியம் என்பது வழங்கப்படும் மொழி. இதன் பொருளை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் முகமாக சத்தியமே இறைவன் என மகாத்மா காந்தியடிகள் சொல்லி வந்தார்கள், காந்தியடிகள் விளங்கிக் கொண்டது போல நாமும் இச்சொற்றெடரின் பொருளை விளங்கிக் கொள்வோமானுல் நாம் ஒவ்வொருவரும் இறை பக்தி மிக்கவர்களாக மாறி விடலாம்.

இந்த உலகமே ஏன் பிரபஞ்சங்களுமே அன்பு அல்லது சத்தியத்தாலேயே கட்டுண்டு கிடக்கிறது. அனைத்தும்

சத்தியத்தின் மாறுபட்ட வடிவங்களாக இருப்பதினுல் தான் இயற்கை விதிகள் அதனதன் வழிப்படி, முறையாக இயங்குகிறது.

விஞ்ஞான முறைப்படி பார்த்தாலும் கோளங்களும், பிரபஞ்சங்களும் எல்லையற்ற விண்வெளியில்ஒருபொதுவான ஈர்ப்புச் சக்திக்குட்பட்டே நிற்கின்றன. இந்த ஈர்ப்புச் சக்தி (Gravitation) கிரகங்களிடையே மட்டுமல்ல, கிரகங்களாகவும், ஏனைய வடிவங்களாகவும் உருவெடுத்துள்ள கலங்கள் (Cell) இந்த சக்தியால் பிணைப்புண்டுநிலையான உருவத்துடன் விளங்குகின்றன, இந்த ஈர்ப்பு சக்தியானது என்ருவது தன் பலத்தை இழக்குமாளுல் இவ்வுலகமே இப்பிரஞ்சமே கண்காணுத விண்வெளியில் உள்ள அனைத்துப் பொருட்களுமே தன் நிலையிழந்து தூசிக் கடலாக வடிந்து மறைந்து போகும் 'கிராவிடேஷன்' எனப்படும் இந்த கவர்ச்சி சக்தியே வடிவங்களுக்கே காரணமாக இருக்கிறது. இது விஞ்ஞான உண்மை.

உண்மையே உயர்ந்த மார்க்கம் என்பதைப் பற்றி நாம் சிந்திப்பதற்கு முன்பாக சத்தியம் என்ருல் என்ன என்பதைப் பற்றித் தெளிவு கொள்ள வேண்டும்.

சத்தியம், உண்மை, வாய்மை, மெய்மை என முப்பிரிவில் அடங்கும். சிந்தையாலும், வாயினுலும் உடலினுலும் உலகில் நேர்மை எனக் கணிக்கப்படுவது எதுவோ அதனை மேற்கொள்பவன் சத்தியவாளுவான் வாயினுல் நேர்மையைப் பற்றிப் பேசிவிட்டு மெய்யினுல் அதற்குப் புறம்பாக நடப்பவன் நேர்மையுடையவனுக மாட்டான். தன்னலத்தை முன்னிட்டு பிறர் நலத்தில் தலையிடுவது நேர்மையாக மாட்டாது. சத்தியத்திற்கு - நேர்மைக்கு மிகச் சிறப்பான உதாரணமாக மாகாத்மாஜீ அவர்களை எடுத்துக் கொள்ளலாம். அவர் நேர்மையை ஆதரிப்பதற்கு - காலநேரம் இடம் வகுப்பு பார்த்தவரல்லர். அநீதி எங்குள்ளதோ அது தனது மனைவியிடம் இருந்தாலும் சரி - அதனை அவர்

கண்டிக்கத் தவறவில்லை. பார்க்க இலேசானதாக இருந்தாலும் உண்மையாகவே இப்போக்கு மிகக் கடினமானது ஓரளவாவது தன்னலத்தைத் தியாகம் செய்யாவிட்டால் இது சாத்தியமாகாதது.

இப்படி நாம் பேசிச் செல்லும் போது எல்லோரினுலும் மகாத்மாஜீயைப் போல் நடந்து கொள்ள இயலாதே? என்ற வினு எழுகிறது.

பிச்சைசக்காரன் முதல் கோடீஸ்வரன் வரை ஒவ்வொரு உயிரும் சடப்பொருளும் பிரமத்தின் அம்சமாக உலகில் நடமாடி வந்தாலும் ஒரு சிலரே இதனை உணர்ந்து, மனிதருள் மாணிக்கமாகத் திகழ்கின்றனர். இதற்குக் காரணம் இப்படியான உண்மைகளை தெளிவாக விளக்கிட போதிய ஆளில்லாததும், இத்துறையில் ஆத்மீக எழுச்சிக்கு பதில் கலப்பட எழுச்சி புகுந்து கொண்டதுமாகும். ஆத்மீகத் துறையில் இன்று தன்னலமும், மனிதாபிமானம் அற்ற செயல்களும் மண்டிவிட்டன. பகுத்தறிவு வாதம் என்ற போர்வையில் கடவுள் மறுப்பும் அதன் மூலம் வன்முறைகளும் மலிந்து விட்ட இந்நேரத்தில் ஆத்மீகப் புரட்சியை எழுப்பக் கூடியவர்கள் மிக வேண்டப்படுகின்றனர். அப்பொழுது தான் மனிதருள் மாணிக்கங்களை மிக உற்பத்தி செய்ய இயலும் இதற்காக இந்நிலையை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளில் இறங்குவதற்கு முன்னதாக

நம்மைப் பற்றி நாம் அறிந்து கொண்டிருக்க வேண்டும், இல்லாவிட்டால் எத்தனை தத்துவ மேதைகள் உதித்தால் என்ன? ஆத்மீக எழுச்சிக்கான முயற்சிகள் எத்தனையை மேற்கொண்டால் என்ன அதனுல் எந்த பிரயோசனமும் ஏற்பட மாட்டாது.

இதற்கான நமது உண்மை நிலையை நமது பலவீனங்கள் சிறப்புகள் ஆகியவற்றை நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இப்படி நம்மையே நாம் உணரத் தலைப்படும் போது வெட்கத்திற்குரிய பல பலவீனங்கள் நம்மி

டையே புகுந்திருப்பதை நாம் அறிய நேரும். இந்த பல வீனங்கள் நம் மனது ஏற்றுக் கொள்ளும் போது நம்மை யறியாமலே நாம் இன்னொரு பலவீனத்தினுள் விழ நேரி டும். இவ்விஷயத்தில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் அவைதாம் நாம் பாவி, கையாலாகாதவன் நான் தாழ்ந்த வன். நான் பிரயோசனமற்றவன், நான் இருந்தும் இல் லாதவன் என்பன போன்ற கூடாத உணர்ச்சிகள்! இப்ப டியான உணர்ச்சிகளுக்குள் வீழ்ந்தவன். மீண்டும் மீழ்வது மிக அரிது! விவேகானந்தர் பேசுகின்றார் 'நான் பாவி, நான் பிரயோசனம் அற்றவன் என்று ஒரு போதும் எண் ணுதே நீயே பெரியவன்; இவ்வுலகிலுள்ள எல்லாவற்றின் பெருமைக்கும் நீ தாழ்ந்தவன் அல்ல' என்று.

இதே போல, நம்மை நாம் உணரத் தலைப்படும் போது நம்மிடையே உள்ள சில பெருந் தன்மையான குணங்களை அறிய நேரும் போது அதனல் எம்மிடையே கர்வம், அகங் காரம் ஆகிய தீய குணங்கள் முகிழ்ந்து விடாமல் பார்த் துக் கொள்ள வேண்டும்.

எவரும் இன்னொருவனை விட தாழ்ந்தவருமில்லை; உய ர்ந்தவருமில்லை. ஒருவரிடமில்லாத குணங்கள் இன்னொரு வரிடம் இருக்கலாம் அவரிடமில்லாத குணங்கள் இன்னெ ருவரிடம் இருக்கலாம். இது உண்மை. இப்படியானவர் கள் இதனை உணர வேண்டும்.

இவ்வாறு நம்மிடையே உள்ள போற்றுவதற்குரிய குணங்கள் அதற்கு எதிர் மாருன குணங்கள். நமது பல வீனங்கள் ஆகியவற்றை நாம் உணர்ந்து கொண்ட பின்பு தீய குணங்களை கூடிய வரை விலக்கவும் போற்றுவதற்கு உரிய குணங்களை இயன்ற அளவுக்கு விருத்தி செய்யவும் முயல வேண்டும். இந்த சமயத்தில், 'நான் யாவருக்கும் தாழ்ந்தவன் அல்ல; அதே சமயம் யாரை விட பெரியவ னும் இல்லை. எல்லோருக்கும் இருக்கும் தகுதிகளை நானும் தேவையான அளவு பெற்றிருக்கிறேன். ஆகவே நான் எதற் கும் அச்சப் படத் தேவையில்லை' என்ற உணர்வு மேலோ

ங்கப் பெற்றிருப்பவராக நாம் இருக்கவேண்டும் இது தேறுதல் மொழிகள் அல்ல. உண்மை.

பரிணும (Evolution) வளர்ச்சியின் உச்சக் கட்டம், மனிதன் அமரனுதலே. நாம் அனைவரும் மகாத்மாக்களாகும் தகுதியினைப் பெற்றிருக்கிறோம். எமது ஆத்மீக வளர்ச்சியின் அளவினை அறிந்து பக்தியினுல் அதனை மேலும் வளர்க்க வேண்டும். ஏதோ எல்லோரும் கோயில் குளம் என்று போகிருர்கள் நானும் போகிறேன் என்று எண்ணுமல், நான் ஒரு இந்து, நான் ஒரு முஸ்லீம், நான் ஒரு கிறிஸ்தவன், நான் ஒரு பௌத்தன் என்ற மனப்பான்மை உடையவர்களாக, அந்தந்த சமயங்களில் முதிர்ச்சி அடைய வேண்டும்.

ஆனுல் தத்தம் மார்க்கங்களில் ஒவ்வொருவனும் முன்னேறி வருகையில் சொந்த மத அறிவின் காரணமாக பிற மத மறுப்பை நம் கொள்கையாக ஏற்றுக்கொள்வோமானுல் நாம் எத்தனை சமய அறிவைப் பெற்றிருந்தாலும் அதனுல் எந்த வித பிரயோசனமும் ஏற்படாது. நாம் எல்லா மத நூல்களையும் கற்க வேண்டும். மற்ற சமயங்களிலுள்ள நல்ல கொள்கைகளை நாம் ஏற்றுக் கொள்ளத் தயங்கக் கூடாது.

சுவாமி ரங்காநந்தாஜீ அவர்கள் ‘சமயம் ஒரு மலர்ப் பூங்கா. ஒவ்வொருவரும் பூங்காவினிடையே சுவர்களை எழுப்பி பிறர் பூங்காவின் அழகை, நறுமணத்தை சுவைக்காமலிருக்கச் செய்யக் கூடாது. பூங்காவின் எழிலை அனைவரும் சுவைக்க வேண்டும்’ என்று இதனைப் பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிருர்.

இவ்வாறு நாம் நடந்து கொள்வோமானுல், மகாத்மாக்களாக முடியாவிட்டாலும், ஆத்மீகத் துறையில் நல்ல முன்னேற்றம் காண்பவர்களாக, வாழ்க்கைப் படியில் இறங்கு நிலையிலில்லாமல் ஏறு நிலையிலுள்ளவர்களாக, வாழ்வில் புது மலர்ச்சி காண்பவர்களாக நாட்டின் சிறந்த பிரஜைகளாகத் திகழ்வோம்.

★★

# கயிறு ஊசல்

வித்துவான் :- அ. வைத்தியலிங்கம்-எம். ஏ.
வேலூர் (சேலம் மாவட்டம்)

— சென்ற இதழ் தொடர்ச்சி —

இதை ஒழிவிலொடுக்கம் பாசங்கழன்ருல் பசுவுக்கிடம் பதியாம் ஊசல்வடம் கழன்றது என்று கூறும்

திருநாவுக்கரசர் தம் இளமைக் காலத்தில் மருள் நீக்கியார் என்ற பெயரோடு தம் தமக்கையார் திலகவதியாரின் ஆதரவில் வாழ்ந்து வந்த காலத்தில் அறநெறியை மேற்கொண்டு சோலை குளம் கா தண்ணீர்ப் பந்தல் வைத்தல் முதலிய அறச் செயல்களைச் செய்து வந்தார். பிறகு அச்சார்பை விட்டுப் பாடலிபுரம் சென்று சமண சமயத்தைச் சார்ந்து அச்சமய நூல்களைக் கற்று அதில் வல்லவராகி அச்சமயத் தலைவராகத் தருமசேனர் என்ற பெயருடன் திகழ்ந்தார் பின்னர் அதையும் விட்டுத் திருவதிகை வந்து திலகவதியாரை அடைந்து இறைவன் அருள் பெற்ருர். நாவுக்கரசர் வாழ்க்கையே உறுகயிறு ஊசலாட்டம் போல் அமைந்துள்ளது. நாவரசர் தேவாரப் பாடல்கள் பல அவருடைய வாழ்க்கை அனுபவங்களைத் தெற்றென விளக்கி நிற்கும். இப்பாடல் அதற்கொரு சான்ருகும்.

இறுதியில் இருசார்புகளையும் விட்டு இறைவனை அடைந்தார். இதை 'அறுகயிறு ஊசலானேன்' என்கிருர். இறைவனையும் ஊசலில் இழுத்து விட எண்ணி அவர் சடையில் வாழும் திங்கள் ஊசலாடுவது போல தோன்றுவதாகப் பாடினர். சிவபெருமான் சடைகள் ஊசல் கயிறு போலவும் பிறைத்திங்கள் அதிலமர்ந்து ஊசலாடுவது போலவும் உவமித்துள்ளார். பிறைவிளங்கும் சடையாய்! யான் அறுகயிறு ஊசல் ஆனேன் என்னைத் தாங்கி அருள் செய்வது உன் கடமையல்லவா? என்னை விட்டு விடாதே யென்று திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வேண்டுகிருர்.

உறுகயிறு ஊசல்போல ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி
மறுகயிறு ஊசல்போல வந்துவந்து உலவும்நெஞ்சம்
பெறுகயிறு ஊசல்போலப் பிறைபுல்கு சடையாய பாதத்து
அறுகயிறு ஊசலானேன் அதிகைவீ ரட்டனீரே. 4 - 26 - 6)

★

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவுதனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 21 ஆண்டுகள் பூர்த்தியாகி 22வது ஆண்டு ஆரம்பமாகி 10-வது இதழ் வெளிவந்துள்ளது. பல சந்தாநேயர்களுண்டைய ஆதரவினுலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி, (இலங்கை)

---

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 17-8-70